மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்காகத் தனியாகக் கேட்கவில்லை. கிரேட்டர் மெட்ராஸ் என்ற அளவுக்குப் பெரியதொரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் சாலை வசதி, குடிநீர் வசதி, புறநகர் வளர்ச்சி வசதிகள் ஆகியவற்றுக்கான திட்டங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அது பற்றி மறுபடியும் ஆராயும்படி நமக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதிலே, டெல்லி போன்ற நகராட்சிகளுக்கு அளித்தது போல் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

சிவகாசி—கிருஷ்ணன் கோயில் சாலை

* 152 வினா—**திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியிலிருந்து எம். புதுப்பட்டி வழியாகக் கிருஷ்ணன் கோயில் வரை செல்லும் சாலையைப் பழுது பார்த்துப் பாலங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. காளிமுத்து : போக்குவரத்துக்கு மிக மிக இன்றியமையாத அந்தச் சாலைகளைப் பழுது பார்த்து பாலங்கள் அமைத்திட இனியாவது முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கோருகின்ற பாலம் கட்டுவதற்குத் தோராயமாக நான்கு லட்சம் ரூபாய் ஆகுமென்றும், இதர சாலைகள் என்ற தலைப்பின் கீழ் அது எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி தற்போது போதுமானதாக இல்லாததால் எடுத்துக்கொள்ள இயலாது என்றும் தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கிறார்கள். அடுத்துப் போடப் படுகின்ற திட்ட காலங்களிலே சாலைகள் பற்றிய நிதி ஒதுக்கீடு செய்யும்போது இதைக் கவனிக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவிக்கலாம்.